# உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்

# மேலே படியுங்கள் . . .

## இது எப்படி வேலை செய்கிறது

### படி 1

உங்களைப் பற்றியும், உங்கள் சூழ்நிலையைப் பற்றியும் ஏற்கனவே எனக்கு என்ன தெரியுமோ அதை வைத்து ஓர் கடிதத்தை எழுதி இத்துடன் இணைக்கிறேன். எனது முடிவை நான் எப்படி எடுப்பேன் என்பதையும், நான் எப்படி சில கேள்விகளை உங்களிடம் கேட்டிருப்பேன் என்பதையும் நான் விவரித்திருக்கிறேன்.

### படி 2

நீங்கள் இப்போது இந்தக் கடிதத்திற்குப் பதிலளிக்க வேண்டும். உங்களைப் பற்றி நான் வைத்திருக்கிற தகவல்கள் சரிதானா என்பதை என்னிடம் சொல்லுங்கள். நான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் நினைக்கிற வேறு எதையும் என்னிடம் சொல்லுங்கள் மற்றும் நான் பதிலளிக்க வேண்டிய கேள்விகளையும் என்னிடம் கேளுங்கள். சரியான முடிவை எடுப்பதற்கு எனக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் என்னிடம் உள்ளன என்பதை நீங்கள் உறுதி செய்து கொள்வதற்கான வாய்ப்பு இது தான் என்பதால் இது முக்கியமானதாகும்.

### படி 3

உங்களது பதில் எனக்குக் கிடைத்ததும், எனக்கு மேலும் தகவல்கள் தேவைப்படவில்லை என்றால் நான் எனது முடிவை எடுத்து விடுவேன். நீங்கள் பதிலளிக்கவில்லை என்றால், ஏற்கெனவே என்னிடம் உள்ள தகவல்களை வைத்து எனது முடிவை நான் எடுத்துவிடக் கூடும். எழுத்துப் பூர்வமான முடிவை உங்களுக்கு அனுப்பி வைத்து விட்டு, ஜாப்சென்டர் பிளஸ்-க்கு ஓர் நகலை நான் அனுப்பி விடுவேன்.

Independent Review Service
for the Social Fund

## இதற்கு எவ்வளவு காலம் ஆகும்?

நீங்கள் எவ்வளவு விரைவாக பதிலளிக்கிறீர்களோ, அவ்வளவு விரைவாக நான் எனது முடிவை எடுக்க முடியும். வழக்கமாக நீங்கள் பதிலளித்ததிலிருந்து ஒரு வாரத்திற்குள் இது எடுக்கப்படும்.

## உங்களுக்குக் கேள்விகள் ஏதேனும் இருந்தால்

எங்களால் முடிந்த உதவியை நாங்கள் செய்வோம். திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை 0800 096 1926 என்ற எண்ணில் எங்களை அழையுங்கள். உதவி செய்யக் கூடிய யாரோ ஒருவரிடம் நீங்கள் நேரடியாகச் சென்று விட வேண்டும். ஒரு தரைவழி தொலைபேசி இணைப்பிலிருந்து நீங்கள் இலவசமாக அழைக்கலாம். நீங்கள் ஒரு மொபைல் தொலைபேசியைப் பயன்படுத்தினால், நாங்களே உங்களைத் திரும்ப அழைத்துப் பேசுவோம்.

## பதிலளிப்பது எப்படி

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை 0800 096 1926 என்ற எண்ணில் தொலைபேசி மூலம் நீங்கள் பதிலளிக்கலாம். ஒரு தரைவழி தொலைபேசி இணைப்பிலிருந்து நீங்கள் இலவசமாக அழைக்கலாம். நீங்கள் ஒரு மொபைல் தொலைபேசியைப் பயன்படுத்தினால், நாங்களே உங்களைத் அழைத்துப் பேசுவோம். வழக்கமாக நீங்கள் நேரடியாகவே பேசமுடியும். இது தான் பதிலளிப்பதற்கான விரைவான வழி. உங்களது பதிலை நாங்கள் எழுதிக் கொண்டு, அதனை திரும்பவும் உங்களுக்குப் படித்துக் காண்பிப்போம். முடிவு குறித்து நீங்கள் என்ன சொன்னீர்களோ, அதன் நகல் ஒன்றையும் உங்களுக்கு நாங்கள் அனுப்பி வைப்போம்.

எழுத்துப் பூர்வமாகவும் நீங்கள் பதிலளிக்கலாம், அதற்கு நாங்கள் உங்களுக்கு அனுப்பி வைத்த பதிலளிக்கும் படிவத்தையும், அஞ்சல் உறையையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

வேறொரு மொழியில் எங்களோடு பேசுவதோ அல்லது எங்களுக்குக் கடிதம் எழுதுவதோ அவசியமாகிற பட்சத்தில், அதற்கும் நாங்கள் ஏற்பாடு செய்ய முடியும். 0800 096 1926 என்ற எண்ணில் எங்களுக்கு தொலைபேசியில் அழையுங்கள் மற்றும் இது குறித்து நாங்கள் உங்களுடன் கலந்துரையாடுவோம்.

## உங்களுக்குப் பார்வை அல்லது காது கேளாத பிரச்சினைகள் இருந்தால்

நீங்கள் பார்வையற்றவராயிருந்து, எங்களது கடிதம் உங்களுக்கு பிரெய்லி மொழியில் அல்லது பெரிய அச்சுப்படிவத்தில் தேவைப்படுமானால், தயவுசெய்து 0800 096 1926 என்ற எண்ணில் எங்களை அழையுங்கள்.

உங்களுக்கு காது கேளாமலிருந்தால், அல்லது சரியாகக் கேட்காது என்கிற பட்சத்தில், உங்களிடம் டெக்ஸ்ட் போன் இருந்தால், நீங்கள் எங்களை 0800 096 1929 என்ற எண்ணில் அழைக்கலாம்.

## உங்களுக்குப் புகார் இருந்தால்

எங்களது சேவையின் எந்தவொரு அம்சமும் உங்களைத் திருப்தி செய்யாமலிருந்தால், தயவுசெய்து எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். 0800 096 1928 என்ற எண்ணில் நீங்கள் இலவசமாக தொலைபேசியில் பேசலாம் அல்லது சார்பற்ற மறுஆய்வு சேவையின் இலவச அஞ்சல் மூலம் எங்களுக்கு எழுதுங்கள்.

நீங்கள் எங்களுக்குத் தருகிற தகவல்களை நாங்கள் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதை எங்களது அந்தரங்கக் கொள்கை விவரிக்கிறது. இது வேண்டுகோளின் பேரில் கிடைக்கப்பெறுகிறது அல்லது www.irs-review.org.uk என்ற எங்களது இணையதளத்தில் கிடைக்கப்பெறுகிறது.